பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 20 சனிக்கிழமை 04.01.2025 கதிர் 058

## இது இரகசியம் அல்ல!

கடந்த வாரம் வவுனியாவில் நடப்பதாக இருந்து கடைசி நேரத்தில் சுரேன் குருசாமியின் மாமியார் இயற்கை எய்தியதன் விளைவாக ஒத்திவைக்கப்பட்ட, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைமைக் குழுக் கூட்டம் ☞ 2

### கஜேந்திரகுமாரின் பேச்சுக்கான அழைப்புக் குறித்து

# கட்சியிடம் கேட்ட பின்னரே என்னால் பதில் தர முடியும்

### தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறீதரன் தெரிவிப்பு



தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பால் முன்னெடுக்கப்படவுள்ள புதிய அரசமைப்பு முயற்சி குறித்து தமிழ் அரசு மற்றும் ரெலோ ஆகிய கட்சிகளுடன் பேசுவது தொடர்பாக அடுத்த நாடாளுமன்றக் கூட்டத் தொடரின்போது ஆராய்வது என்ற தமிழ் தேசிய மக்கள் முன்னணித் தலைவர் கஜேந்திரகுமாரின் அழைப்புக்கு கட்சியுடன் கலந்துரையாடிய பின்னரே பதிலளிக்க முடியும் என்று தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறீதரன் தெரிவித்தார். இருப்பினும் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு என்னவென்பது குறித்து தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் கொள்கை ரீதியில் பொதுநிலைப்பா டொன்றுக்கு வரவேண்டியது அவசியம் எனவும் வலியுறுத்தினார்.

பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் கடும் பின்னடைவுகளைச் சந்தித்ததை அடுத்தும் மட்டக்களப்பு தவிர்ந்த வடக்கு கிழக்கின் ஏனைய மாவட்டங்களில் தேசிய மக்கள் சக்தி தமிழ் மக்களின் ஆதரவுடன் வெற்றி பெற்றதை அடுத்தும், நாடாளுமன்றத்தில் உள்ள தமிழ் அரசுக் கட்சி மற்றும் ரெலோ ஆகியவற்றுடன் இணைந்து செயற்படும் திட்டத்தை ☞ 2

### கொலைக் குற்றச்சாட்டில்

## வியாழேந்திரனின் சாரதி கைதாகி விளக்கமறியலில்

முன்னாள் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் வீட்டின் முன்பாக 2021 ஆம் ஆண்டு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக சி.ஐ.டியினரால் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட வியாழேந்திரனின் வாகன சாரதி ஒருவரை ஜனவரி 17 வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நேற்று உத்தரவிட்டார்

2021 ஆம் ஆண்டு ஜுன் 21 அப்போதைய இராஜாங்க அமைச்சரான வியாழேந்தின் வீட்டுக்கு முன்னால் ☞ 8

## சீனாவில் பரவும் வைரஸ் மீது இலங்கை அதிகாரிகள் கவனம்

சீனாவில் பரவி வரும் புதிய வைரஸ் குறித்து, இலங்கை சுகாதார பிரிவினர் கவனம் செலுத்தி வருவதாக அறிவித்துள்ளனர்.

இது குறித்து முறையான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, எதிர்வரும் நாட்களில் அறிக்கை வெளியிடப்படும் என்று தொற்றுநோயியல் பிரிவின் மூத்த அதிகாரி; தெரிவித்தார்.

கொவிட்-19 வைரஸ் தொற்றுநோய் ஏற்பட்டு ஐந்து ஆண்டுகளின் பின்னர், சீனாவில் ஒரு புதிய வைரஸ் பரவி வருகிறது.

எச்எம்பிவி (HMPV) எனப்படும் இந்த வைரஸுக்கும் கொவிட் அறிகுறிகள் இருப்பதாக, வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தற்போது சீனாவில் இந்த வைரஸ் பாதிப்பு வேகமாக பரவி வருகிறது. மேலும், இந்த வைரஸ் ☞ 2



## தேசிய மக்கள் சக்தியே மக்களின் பெரும் சாபம்

### ஐக்கி மக்கள் சக்தி எம்பி கடும் தாக்கு

நாட்டுமக்களின் 76 ஆண்டுகால சாபம் குறித்து பேசிய தேசிய மக்கள் சக்தியே இன்று மக்களுக்கு பெரும் சாபமாகியிருக்கிறது. 100 நாட்களில் அரிசியின் விலையை நூறு ரூபாவால் அதிகரிக்கச் செய்திருக்கிறது. 24 மணித்தியாலங்களில் ☞ 8

## அமெரிக்காவில் பஸில் ராஜபக்ச பெருமளவில் சொத்துக் குவிப்பு

### விமல் வீரவன்ஸ நேற்றுக் குற்றச்சாட்டு

இலங்கையில் வசித்துக்கொண்டு அமெரிக்காவில் தனது பெயரிலும் தன்னுடைய குடும்பத்தாரது பெயர்களிலும் பஸில் ராஜபக்ச பெரும் சொத்துக்களைச் சேமித்திருக்கின்றார். முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டால் இன்னும் பல உண்மைகள் வெளிவரும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அவர் நிதிக் குற்றப்புலனாய்வு பிரிவில் நேற்று வாக்குமூலமளித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் ☞ 2

## வீதியோரக் கடைகள் அகற்றப்படுவதான செய்தியில் உண்மை ஏதுமில்லையாம்

'தூய ஸ்ரீ லங்கா' தேசிய வேலைத் திட்டத்துக்கமைய வீதியோர சிறு வியாபாரங்கள் அகற்றப்படுவதாகவும், அவ்வாறு வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் வெளியாகியுள்ள செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை என சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அவர் அரசதகவல் திணைக்களத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெரும்பான்மையான மக்களின் விருப்பிற்கு மதிப்பளித்து ஆட்சியமைத்துள்ள தேசிய மக்கள் சக்தி, ஜனாதிபதியின் தலைமைத்துவத்தின் கீழ் புதிய தேசிய வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளது. 24 அமைச்சுக்களையும் உள்ளடக்கிய வகையில் நாட்டிற்கு சிறந்த அடித்தளத்தை இடும் நோக்குடன் புதிய வரவு - செலவு திட்டம் சமர்ப்பிக்கப்பட உள்ளது. ☞ 8

## அனுபவமில்லாத ஆளும்தரப்பினரது பெறுபேறு பயங்கரமானதாயிருக்கும்

### எச்சரிக்கிறார் ஐ.தே.க. தவிசாளர் வஜிர

நாட்டினதும் மக்களினதும் எதிர்காலத்தை அனுபவமில்லாத அணியொன்றுக்கு மக்கள் பொறுப்புக் கொடுத்திருக்கிறார்கள். இதன் பெறுபேறு மிகவும் பயங்கரமானதாகும். இது பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்போது ஐக்கிய தேசியக் கட்சி சவால்களை ஏற்றுக்கொண்டு நாட்டையும் மக்களையும் பாதுகாக்க தயாராக இருக்கின்றதென அந்தக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ☞ 8

## காற்றாலை மின் உற்பத்தியை மன்னாரில் நிறுத்தத் தீர்மானம்

### ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது

மன்னாரில் முன்னெடுக்கப்பட்டுவருகின்ற காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு போன்ற திட்டங்களை தற்காலிகமாக உடன் நிறுத்தவேண்டும் என்று மன்னார் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. இது குறித்த அறிவிப்பை ஒருங்கிணைப்பு குழு தலைவரும் பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க விடுத்தார்.

மன்னார் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று பிற்பகல் மன்னார் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் மன்னாருக்கான தொடருந்து போக்குவரத்து சேவைகள், திண்மக் கழிவு அகற்றுதலில் உள்ள சிக்கல்கள், காற்றாலை மின்சாரத் திட்டம், மற்றும் கனியவள மண்ணகழ்வு போன் ற ☞ 2

## உள்ளாட்சி தேர்தல் சட்டத் திருத்தம் அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில்

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திருத்தச் சட்டமூலம் அடுத்த வாரம் நாடாளு மன்றத்தில் சமர்ப்பிக்கப் படவுள்ளது.

இந்தச் சட்டமூலம் தற்போது வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதாக பொதுநிர்வாக, உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

திருத்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்படவில்லையெனின் அதனை ☞ 2

# நெல்லைக் கொள்வனவு செய்து அரிசியை உற்பத்திசெய்வோம்

## அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவிப்பு

இம்முறை பெரும்போக நெல் அறுவடையை சதொச மற்றும் நெல் சந்தைப்படுத்தல் சபையின் ஊடாக கொள்வனவு செய்து அரிசியை உற்பத்தி செய்து விநியோகிப்பதே ஆளும்தரப்பின் நோக்கம் என வர்த்தக மற்றும் வாணிப அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

அவ்வப்போது நாட்டில் ஏற்படும் அரிசித் தட்டுப்பாட்டை போக்கவும், விலையைக் கட்டுப்படுத்தவும் ஆளும்தரப்புத் தலையிட்டு விவசாயிகளுக்கு உத்தரவாத விலையை பெற்றுத் தர நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அநுராதபுரம் ஓயாமடுவ பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அரச நெல் களஞ்சியசாலைகள் தொடர்பில் ஆராய்வதற்காக மேற்கொள்ளப் பட்ட கண்காணிப்புப் பயணத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

சந்தையில் நிலவும் பெரும் முரண்பாடு களைச் சாதகமாகப் பயன்படுத்தி சில அரிசி ஆலை உரிமையாளர்கள் அசாதாரண இலாபம் ஈட்டி வருகின்றனர் என்றும் அந்த முரண்பாடுகளுக்கு விடை காண ஆளும்தரப்புச் செயற்பட்டு வருகின்றது என்றும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

நாட்டின் நெல் உற்பத்தியில் ஏறக்குறைய முப்பது சதவீதத்தை பெரும் ஆலைகள் கொள்வனவு செய்வதாகவும், எஞ்சிய உற்பத்தி சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலைகளால் கொள்வனவு செய்யப்படுவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதற்குப் போட்டியாக நெல்லை கொள்வனவு செய்ய ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்து வருவதாக அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

தற்போது நாட்டில் நிலவும் அரிசித் தட்டுப்பாட்டைக் குறைக்கும் வகையில் கடந்த மாதம் 31ஆம் திகதி வரை 86 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை இலங்கைக்கு இறக்குமதி செய்து பிரச்சினைக்கு தீர்வு கண்டதாகவும், அரிசி இறக்குமதிக்கான இலவச எல்லை இம்மாதம் 10ஆம் திகதிக்குப் பின்னர் நீக்கப்படும் எனவும் அமைச்சர் கூறினார்.

## இனி இது .....

நாளை வவுனியாவில் கூடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கோவில் குளத்தில் உள்ள ஆனந்தி ஹோட்டலில் காலை 1-0 மணிக்கு கூட்டம் தொடங்கவுள்ளது.

2024 நாடாளுமன்றத் தேர்தலில் இந்தக் கூட்டணி அடைந்த படுதோல்விக்கு ஈபிஆர்எல்எவ், தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப்போராளிகள்கட்சிபோன்றவற்றுக்கு மக்கள் ஆதரவின்மைதான் காரணம் என்று ரெலோவும் புளொட்டும் குற்றஞ்சாட்டும் அதேவேளை, ரெலோவின் பின் கதவு அரசியலும் ரணில் விக்கிரமசிங்கவுடனான அதன் இரகசிய பேரம் பேசல்களும்தான் தோல்விக்குக் காரணம் என்று மறுதரப்புமாக மல்லுக்கட்டிக்கொண்டிருக்கும் நிலையில் கூட்டணியின் தலைவிதியைத் தீர்மானிக்கும் கூட்டமாக இந்தக் கூட்டம் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் வந்தவிடப்போகின்றன உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சியுடன் மீண்டும் போய்ச் சேர்ந்துகொள்ளும் நப்பாசையுடன் ரெலோ தனது தலைமைக் குழுவில் தீர்மானம் எல்லாம் நிறைவேற்றிப் பார்த்தது. ஆனால் அந்தப் பக்கத்திலிருந்து தெளிவான பதில் இல்லை. அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனைத் தவிர வேறு யாரும் இந்த யோசனையை ஆதரித்து வரவேற்றதாக இல்லை. சிறீதரன் மட்டுமே தமிழ் தேசியம் பேசும் கட்சிகளின் ஒற்றுமை என்கிற மாயைத் தொடர்ந்தும் பாடி வருகின்றார்.

இந்த நிலையில் புளொட்டும் தமிழ் அரசுக் கட்சியுடன் மீண்டும் ஒட்டிக்கொள்ள விருப்பப்படுகின்றது. அதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவு என்று தெரிந்திருப்பதால், தமது அரசியல் பிரிவின் ஊடாக மீண்டும் வெளிச்சவீட்டுச் சின்னத்தில் தேர்தலைக் கேட்பது என்று தீர்மானித்திருக்கின்றது. இனியொருபோதும் சங்கு சின்னத்தில் தேர்தல் கேட்பதில்லை என்ற முடிவில் அது திடமாக இருக்கின்றது. இதனால் இன்றைய கூட்டம் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் இறுதிக் கூட்டமாக இருக்கும் என்றே பலராலும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கிடையில் ரெலோ தலைமைக்கு எதிரான உட்கட்சிக் கிளர்ச்சி தொடர்ந்துகொண்டே இருக்கின்றது. கட்சியின் பொதுக் குழுவைக் கூட்டும்படி தலைமைக் குழு உறுப்பினர்கள் பலரும் கேட்டும், கட்சி உறுப்பினர்கள் பலரும் வலியுறுத்தியும் ரெலோ தலைமை அதற்குச் செவி சாய்க்கவில்லை. பொதுக் குழுவைக் கூட்டினால் தமது தலைமை பறிக்கப்பட்டுவிடக்கூடும் என்ற அச்சம் காரணமாக கூட்டம் கூட்டப்படவில்லை என்று கிளர்ச்சிக் குழுவினர் கூறுகின்றனர்.

அதுமட்டுமன்றி, நாடாளுமன்றத் தேர்தல் தோல்விக்குப் பின்னர் கிழக்கில் பிள்ளையான், வியாழேந்திரன் ஆகியோருடன் இணைந்து உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்கொள்ளலாமா என்று ரெலோ ஆராய்ந்து வருவதாகவும் பூர்வாங்கப் பேச்சு இடம்பெற்றுள்ளதாகவும் கூறும் கிளர்ச்சிக் குழுவினர் இதனால் கொதித்துப்போயுள்ளனர். தமிழ் இனப்படுகொலையாளிகளான மகிந்த தரப்பினருடன் நகமும் சதையுமாக இருந்தவர்களுடன் சேர்ந்துகொண்டு அரசியல் செய்ய முயலும் இந்தத் தலைமையை இனியும் வைத்திருப்பதா என்பதே அவர்களின் குமுறலுக்குக் காரணம். அதிலும் குறிப்பாக கிழக்கில் இந்த முயற்சியை முன்னெடுக்க முயலும் கட்சியினரை விரட்டவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கிறார்கள்.

அப்படித் தீவிரமடைந்திருக்கும் இந்தப் பிரச்சினைக்கு நடுவே, நாடாளுமன்றத் தேர்தலின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் ஒரு புதிய தகவலும் வெளிவந்திருக்கிறது. அது குறித்து எனக்குச் சொல்லப்பட்டவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன்.

கிழக்கில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் தமிழ் அரசுக் கட்சியை எதிர்த்து ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி போட்டியிட்டது. அப்படிப் போட்டியிட்ட ஒரு கட்சியின் வேட்பாளருக்கு தேர்தல் செலவுகளுக்காக ஒரு கோடி ரூபாய் தருவதாக மற்றொரு கட்சியின் வேட்பாளர் உறுதியளித்துள்ளார். ஆனால், கடைசியில் 60 லட்சம் ரூபாய் மட்டுமே தனக்குத் தரப்பட்டதாகவும் மிகுதியைத் தராமல் ஏமாற்றுவதால் தனக்கு 40 லட்சம் ரூபாய் நட்டம் ஏற்பட்டுவிட்டதாகவும் 'துரை' எல்லோரிடமும் புலம்பித் திரிகிறார். இந்தச் சம்பவத்தைப் பிடித்துக்கொண்ட கிளர்ச்சியாளர்கள், இவ்வளவு பணத்தைக் கொடுக்க தமது கட்சிக்காரருக்கு எங்கிருந்து பணம் வந்தது? எப்படி இந்தளவு பணத்தை அவர் சேகரித்தார்? என்றெல்லாம் கேள்வி எழுப்பத் தொடங்கியிருக்கிறார்கள்.

'படம் காட்டும்' புலம்பெயர் தமிழ் பெரு முதலாளி ஒருவரிடமிருந்து கோடிக் கணக்கில் பணத்தைப் பெற்று அதை கறுப்புப் பையில் சுற்றி (ஒருவேளை பணமும் கறுப்புப் பணமாக இருக்குமோ!) குழந்தைப் பிள்ளையை அணைத்துச் செல்வது போன்று அவர் எடுத்துச் சென்றதை கண்டதற்குச் சாட்சிகள் இருப்பதாகச் சிலரும், இல்லை ஒட்டுக்குழுவாக இருந்தபோது உறுப்பினர்களுக்கு எனக் கொடுக்கப்பட்ட பணத்திலும் தமிழ் மக்களுக்குத் துரோகம் செய்து சிங்கள ஆட்சியாளர்களுக்கு வேண்டியதைச் செய்ததன் மூலமும் கிடைத்த பணத்திலும்தான் இப்படி அவரால் பணம் கொடுக்க முடிகின்றது என்றும் சிலருமாகச் சொல்கிறார்கள்.

ஆக மொத்தத்தில் இந்தப் பிரச்சினைகள் நீள நீள இன்னும் பலப் பல 'சீத்துவங்கள்' எல்லாம் ஒவ்வொன்றாக வெளியே வரும் போலத்தான் இருக்கின்றது. வாழ்க தமிழ் அரசியல்!

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## கட்சியிடம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கஜேந்திரகுமார் முன்வைத்தார். ஆளும்தரப்பின் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகளின்போதாவது முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரனால் தமிழ் மக்கள் பேரவையின் ஊடாக முன்வைக்கப்பட்ட அரசமைப்பு வரைவை முன்வைத்து குறைந்தபட்சம் அவ்விடயத்தில் மாத்திரமேனும் தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் ஒன்றுபட்டு செயற்படவேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார். அவர் இது தொடர்பில் ஏற்கனவே இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக்குழுத் தலைவர் சிறிதரன் மற்றும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அடைக்கலநாதன் ஆகியோரைக் கடந்த மாதம் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

இந்தச் சந்திப்பில் தமிழ் மக்கள் பேரவையின் அரசமைப்பு வரைவுக்குப் பதிலாகத் தமிழ் அரசுக் கட்சியினால் ஆளும் தரப்புக்கு தமது கட்சியினால் வழங்கப்பட்ட அரசமைப்பு வரைவின் பிரதியை சிறீதரனும் கஜேந்திரகுமாரிடம் வழங்கியிருந்தார். இருப்பினும் தமிழ் மக்கள் பேரவையின் வரைவையொட்டியே இந்தப் பேச்சுக்கள் என்று கஜேந்திரகுமார் திரும்பத் திரும்பச் சொல்லி வருகின்றார்.

இந்தப் பின்னணியில் தற்போது தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத்திட்ட வரைவு குறித்து தமிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடுவதற்கு உத்தேசித்திருப்பதாகவும், ஜனவரி 7 நாடாளுமன்றம் கூடவிருக்கும் நிலையில், அன்றைய தினம் சிறிதரன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோருடன் கலந்துரையாடி அச்சந்திப்புக்குரிய திகதியைத் தீர்மானிக்க இருப்பதாகவும் கஜேந்திரகுமார் தெரிவித்திருக்கிறார்.

இதுபற்றி சிறிதரனிடம் வினவியபோது, தமிழ் மக்களின் நலனை முன்னிறுத்தி தமிழ்த் தேசிய கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட்டுத்தான் ஆகவேண்டும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை எனவும், அதனை இலக்காகக்கொண்ட முயற்சிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுவருவதாகவும் தெரிவித்தார்.

அதேவேளை, இது குறித்து முதலில் தமது கட்சிக்குள் கலந்துரையாடித் தீர்மானிக்கவேண்டியிருப்பதாக சுட்டிக்காட்டிய அவர், அதனைத் தொடர்ந்து தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு குறித்து தமிழ்த் தேசியக் கட்சிகள் கொள்கை ரீதியில் பொதுநிலைப்பாடு ஒன்றுக்கு வரவேண்டியது அவசியம் என்றும் வலியுறுத்தினார்.

எது எவ்வாறிருப்பினும், தற்போதைய சூழ்நிலையில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றுபடாமல் தமிழர்களுக்கு வரலாறு இல்லை எனவும் சிறிதரன் சுட்டிக்காட்டினார்.

## அமெரிக்காவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவித்ததாவது:

பஸில் ராஜபக்ச மற்றும் அவரது குடும்பத்தாருக்கு அமெரிக்காவிலுள்ள சொத்துக்கள் தொடர்பில் சில வருடங்களுக்கு முன்னர் இலத்திரனியல் ஊடகமொன்றுக்கு நான் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் வாக்குமூலமளிப்பதற்காக எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அது தொடர்பில் நான் எனது தெளிவுபடுத்தலை வழங்கினேன்.

எம்மிடமுள்ள சில எழுத்து மூல ஆவணங்களையும் நாம் சமர்ப்பித்திருக்கின்றோம். பஸில் ராஜபக்ச அமெரிக்காவில் எந்தத் தொழிலும் செய்யவில்லை. ஆனால் எம்மால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்களில் அவரது சொத்து விவரங்கள் அதற்கு முரணானவையாகக் காணப்படுகின்றன. இலங்கையில் செய்த தொழிலில் பெற்றுக் கொண்ட பணத்தின் ஊடாகவே அவர் இவ்வாறு சொத்துக்களை சேகரித்திருக்கின்றார்.

நாம் வழங்கிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு ஏனைய தகவல்களையும் சேகரிப்பதே பொலிஸாரின் பொறுப்பாகும். விசாரணைகள் முறையாக முன்னெடுக்கப்பட்டால் மேலும் பல முக்கிய தகவல்கள் வெளிவர வாய்ப்புள்ளது. பஸில் ராஜபக்ச இரட்டைக் குடியுரிமை கொண்ட நபராவார். எனவே அர்ஜுன மகேந்திரனுக்கு எதிரான சட்ட நடவடிக்கையைவிட பசிலுக்கு எதிரான சட்ட நடவடிக்கை கடுமையானதாக இருக்கும் என்றார்.

## உள்ளாட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மாதத்திலேயே நிறைவேற்ற முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதன் பின்னர் கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பரீட்சைக்கு இடையூறு ஏற்படாத வகையில் ஏப்ரல் மாதத்துக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த ஆளும்தரப்புத் திட்டமிட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

திறைசேரியூடாக உரிய வகையில் நிதி ஒதுக்கீடு செய்யப்படாததால் 2023ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படவில்லை. கடந்த பொதுத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் ஆகியவற்றின் பின்னர் நாட்டின் அரசியல் களநிலவரம் மற்றும் கட்சிகளின் கள நிலவரம் என்பன மாற்றமடைந்துவிட்டதன் காரணமாக உள்ளூராட்சி சபைத் தேர்தல்களுக்கு ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்புமனுக்களை வலுவற்றதாக்கி புதிய வேட்புமனுக்களை ஏற்றுக்கொவதற்கு ஆளும் தரப்புத் தீர்மானித்துள்ளது. அதற்கான சட்டத் திருத்தமே தற்போது கொண்டுவரப்படவுள்ளது.

## சீனாவில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொற்றுக்கு உள்ளான நோயாளிகளால் சில மருத்துவமனைகள் நிரம்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

14 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் அதிகளவில் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சீனச் சுகாதார பிரிவை மேற்கோள் காட்டி செய்திகள் வெளியாகி உள்ளன.

## காற்றாலை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

இலங்கை மின்சார சபையினால் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த காற்றாலை திட்டத்தினை விளக்குவதற்கு அத்திட்டத்தின் முகாமையாளர் முயன்ற போது கிராம மட்ட பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள் ஒன்று சேர்ந்து இதற்குப் பெரும் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதன்போது, காற்றாலை மற்றும் கனிய மணல் அகழ்வு தொடர்பாக கருத்து தெரிவித்த அமைச்சர் மக்கள் விரும்பாத ஒரு செயற்பாட்டினை தொடர்ந்ததும் முன்னெடுக்க முடியாது என்றார். எனவே இந்த திட்டங்களை தற்காலிகமாக நிறுத்திவைக்க இந்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இதையடுத்து இந்தக் காற்றாலைத் திட்டம் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்று ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் உத்தரவிட்டார். மேலும் இந்த நடவடிக்கை தொடருமாயின் மக்களின் எதிர்ப்பை எதிர்கொள்ள நேரிடும் எனவும் அவர் எச்சரித்தார். அடுத்த மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் இந்த விடயம் குறித்து மீள் பரிசீலனை செய்யப்படும் எனவும் அவர் அறிவித்தார்.

மேலும், மன்னார் நகர சபையினால் சேகரிக்கப்படும் திண்ம கழிவுகளை கொட்டுவதற்கு உரிய இடம் இல்லை என மன்னார் நகர சபையின் செயலாளரினால் மன்னார் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முன் வைக்கப்பட்டது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு எதுவும் காணப்படவில்லை.

# தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கக்கோரி கிளிநொச்சியில் தொடர் கையெழுத்து சேகரிப்பு



நீண்டகாலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கிளிநொச்சி நகரில் பொதுச் சந்தைக்கு அருகில் கையெழுத்து போராட்டம் ஒன்று நேற்று (வெள்ளிக்கிழமை) ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

போராளிகள் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி நகரில் பொதுச் சந்தைக்கு அருகில் குறித்த கையெழுத்துப் போராட்டம் மேற்கொள்ள தயாரான போது அங்குவந்த கிளிநொச்சி போக்குவரத்து பொலிஸார் ஒலிபெருக்கி அனுமதி பெற்று குறித்த கையெழுத்து போராட்டத்தை மேற்கொள்ளுமாறு தெரிவித்து போராட்டத்தை தடுத்து நிறுத்தினர்.

பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளையும், புனர்வாழ்வு அளிக்கப்பட்டுசமூகமயப்படுத்தப்பட்ட பின்னர் நீதி மன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட பின்பும் மீண்டும் கைது செய்யப்பட்டுதடுத்துவைக்கப்பட்டுள்ள போராளிகளையும் புதிய அரசாங்கம் விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தி குறித்த கையெழுத்துப் போராட்டம் தொடர்ச்சியாக வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் இடம்பெற்று வருகின்ற நிலையில் நேற்றைய தினம் கிளிநொச்சியில் நடைபெற்றது.

இந்நிலையில்,கிளிநொச்சியில்மட்டும் இவ்வாறு பொலிஸார் இடையூறுகளை ஏற்படுத்தி தடுத்து நிறுத்தியமைக்கு ஏற்பாட்டாளர்கள் அதிருப்தி வெளியிட்டனர்.

இதனைத் தொடர்ந்து கிளிநொச்சி பொலிஸ் நிலையம் சென்ற ஏற்பாட்டாளர்கள் பொலிஸாருக்கு விடயங்களை தெளிவுபடுத்திய பின்னர் பொலிஸார் குறித்த கையெழுத்து போராட்டத்தை மேற்கொள்ள அனுமதியளித்தனர். இதனை தொடர்ந்து மீண்டும் குறித்த இடத்தில் கையெழுத்து போராட்டம் நடைபெற்று வருகிறது.

குறித்த கையெழுத்து போராட்டத்தில்மததலைவர்கள்சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் சமூக செயற்பாட்டாளர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டு தமது கையொப்பங்களை பதிவுசெதனர்.

நீண்டகாலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி சேகரிக்கப்படும் குறித்த கையெழுத்துக்கள் அடங்கிய மகஜர் ஜனாதிபதி அவர்களிடம்கையளிக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# தண்ணீர் பீச்சி அடித்தாலும் கட்டையால் அடித்துத் தடுத்தாலும் போராட்டம் செய்வோம்: யாழ்ப்பாண மீனவர்கள் கடும் உறுதி

புதிதாக பதவியேற்றுள்ள அரசு எங்களை தண்ணீர் கொண்டு அடித்தாலும் கட்டை கொண்டு அடித்தாலும் நாங்கள் பயப்படாமல், எமது வளங்கள் அழிக்கப்படுவதற்கு எதிராக, யாழ்ப்பாணம் இந்திய துணை தூதரகத்திற்கு முன்னால் போராட்டம் செய்வோம் என யாழ்ப்பாணம் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத்தின் உப தலைவர் அந்தோனிப்பிள்ளை பிரான்ஸிஸ் ரட்ணகுமார் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் சம்மேளனத்தின் அலுவலகத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த அரசாங்கத்தின் இறுதி காலகட்டத்தில் இந்தியன் இழுவைப் படகுகளை கட்டாயப்படுத்தி நாங்கள் ஓரளவு தொழில் செய்துகொண்டு இருந்தோம்

ஆனால் புதிய அரசாங்கம் வந்த பின்னர் நிறைய இழுவைமடி படகுகள் எங்களது வளங்களை அழிக்கின்றன. ஆகையால் எமது தொழிலாளிகளின் வலைகளும் இல்லாமல் போகின்றன.

புதிதாக பதவியேற்றுள்ள கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன் அவர்களுக்கு நாங்கள் இதனை புதிதாக சொல்லவேண்டிய அவசியமில்லை.

கடந்த காலத்தில் நாங்கள் போராட்டத்தை நடத்தியபோது, இந்திய இழுவைப் படகுகள் குறித்து தமது தலைவருக்கு உடனடியாக தெரியப்படுத்துவோம், நடவடிக்கை எடுப்போம் என தற்போதைய கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகரன் தெரிவித்தார்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் கடற்றொழில் அமைச்சர் புதிதாக பதவியேற்ற பின்னர் இந்த இழுவை படகுகளை நிறுத்துமாறு எமது சம்மேளனம் சார்பாக நாங்கள் பல கோரிக்கை கடிதங்களை கடற்றொழில் அமைச்சரிடம் கையளித்துள்ளோம்.




இருப்பினும் நெடுந்தீவு தொடக்கம் சுண்டிகுளம் வரையிலான கடற் பகுதியில் இந்தியன் இழுவை படகுகள் எமது வளங்களை அழிக்கின்றன.

இவற்றினை எம்மால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. ஜனாதிபதியும் கடற்தொழில் அமைச்சரும் இதற்கு ஒரு சரியான முடிவினை எடுக்காவிட்டால், யாழ்ப்பாணத்தில் உள்ள கடற்தொழில் செய்யும் மக்களை இணைத்து நாங்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்திற்கு முன்னால் போராட்டம் ஒன்றை செய்வோம்.

இப்பொழுது புதிய அரசாங்கம் ஒன்று வந்திருக்கின்றது. நாங்கள் ஆர்ப்பாட்டம் செய்கின்றபோது தண்ணியால்அடிப்பார்கள்,கட்டையால் அடிப்பார்கள் அவற்றையெல்லாம் பற்றி எங்களுக்கு பயமில்லை.

எங்களது பிரச்சினை தீர வேண்டும் என்றால் நாங்கள் போராட்டம் செய்வோம். எனவே ஜனாதிபதியும் கடற்தொழில் அமைச்சரும் இதற்கு ஒரு சரியான முடிவு கூற வேண்டும். - என்றார்.

# சுண்ணக் கற்களுடன் பாரவூர்தியை மடக்கிப் பிடித்த இளங்குமரன் எம்.பி.





யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலை சீமெந்து உற்பத்தி தொழிற்சாலைக்குசட்டவிரோதமான முறையில் சுண்ணக் கற்களை ஏற்றிச்சென்ற பாரவூர்தியை சாவகச்சேரி நுணாவில் பகுதியில் வைத்து வழிமறித்த நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது -

அண்மைய நாள்களில் மந்துவில் பிரதேசத்திலிருந்து, யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல கட்டடப்பொருள் விற்பனை செய்யும் வர்த்தகருக்குச் சொந்தமான பாரவூர்தி மூலமாக சட்டவிரோதமான முறையில் சுண்ணக்கற்கள் அகழ்ந்துசெல்வதாகப் பிரதேச மக்களால் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமாரனுக்கு முறைப்பாடுகள்கிடைக்கப்பெற்றன.

அதனை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கையின் போது வியாழக்கிழமை இரவு 10.15 மணியளவில் நுணாவில் பகுதியில் வைத்து பாரவூர்தியை வழிமறித்து சோதனையிட்ட போது அனுமதிப்பத்திரம் இன்றி சுண்ணக் கற்களை ஏற்றிச் சென்றமை கண்டுபிடிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, குறித்த பாரவூர்தி மேலதிக விசாரணைகளுக்காக சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# சுமையை அதிகரிப்பது புத்திசாலித்தனமாகாது

இம்முறை பெரும்போக நெல் அறுவடையின்போது நெல்லைக் கொள்வனவு செய்து அரிசியை உற்பத்தி செய்து விநியோகிக்க இருப்பதாக வர்த்தக மற்றும் வாணிப அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவிக்கிறார்.

அவ்வப்போது நாட்டில் ஏற்படும் அரிசித் தட்டுப்பாட்டை போக்கவும், விலையைக் கட்டுப்படுத்தவும் ஆளும்தரப்புத் தலையிட்டு விவசாயிகளுக்கு உத்தரவாத விலையை பெற்றுத் தரவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவிக்கிறார்.

இலங்கையில் அரிசிக்குத் தட்டுப்பாடு நிலவுவுதன் அரிசி விலை தொடர்ந்து அதிகரித்துச் செல்கிறது. பொருளாதார நெருக்கடி தீவிரமாக இருந்த காலத்தில்கூட இல்லாத அளவிற்கு இப்போது அரிசியின்விலையும்தேங்காயின்விலையும்அதிகரித்துள்ளன. இந்த நிலையினைச்சமாளிப்பதற்குஅரிசியை இறக்குமதியை ஆளும்தரப்பு அனுமதித்துள்ளது. இலங்கையில் நெல் உற்பத்தி தன்னிறைவுக்கும் அதிகமாக இருந்தபோதும் அரிசிக்கான தட்டுப்பாட்டையும் விலை அதிகரிப்பையும் ஆளும்தரப்பால் கட்டுப்படுத்த முடியவில்லை. அதன் விளைவாகவே அரிசியை இறக்குமதி செய்வதற்கு ஆளும்தரப்பு தீர்மானித்தது. எனினும் இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கு விதிக்கப்படும் உயர் வரி காரணமாக சந்தையில் அரிசியின் விலை குறைவது சாத்தியப்படவில்லை.

இந்த நிலையிலேயே நெல்லைக் கொள்வனவு செய்து அதனை அரியாக்கி விநியோகிக்கும் திட்டத்திற்கு ஆளும்தரப்பு வந்துள்ளது என்பது வெளிப்படையாகவே தெரிகின்றது. நெல்லை அரசு கொள்வனவு செய்வது ஒன்றும் புதிதல்ல. இதற்கு முன்னரும் ஆளும் தரப்புக்கள் அவ்வப்போது நெல்லைக் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்துவதை வழக்கமாகக் கொண்டிருந்தன. அரிசி ஆலை உரிமையாளர்கள் அறாவிலைக்கு விவசாயிகளிடம் இருந்து நெல்லைக்கொள்வனவுசெய்வதைத் தடுப்பதற்கும் விவசாயிகளுக்கு உத்தரவாத விலை கிடைப்பதற்குமாக நெல்லைக் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்துவதை ஆளும் தரப்புகள் அவ்வப்போது கொள்கை முடிவுகளாக எடுத்து வந்திருக்கின்றன. ஆனால், அவை எவையும் அந்த நெல்லை அரிசியாக்கி சந்தைப்படுத்தியதில்லை. தேவைப்படும்போது நெல்லைச் சந்தைக்குவிடும் வழக்கத்தையே கொண்டிருந்துள்ளன.

இப்போது பிரச்சினைக்குத் தீர்வாக அந்த வர்த்தகத்தை அல்லது வியாபாரத்தை அரசு தனது கைகளுக்கு எடுத்துக்கொள்ளும் போக்கிற்குச் செல்கிறதா என்கிற சந்தேகம் நெல்லை அரிசியாக்கி விநியோக்கிக்கும் ஆளும் தரப்பின் திட்டத்தின் மூலம் உருவாகிறது. இலங்கை போன்ற நாடுகள் முதலாளித்துவ பொருளாதார முறைக்குள் நுழைந்து பல தசாப்தங்களாகின்றன. இல்லை நாடு தொடர்ந்தும் ஒரு கலப்புப் பொருளாதார முறைமைக்குள்ளேயே இருக்கின்றது என்று ஆளும் தரப்புக்கள் சொல்லிக்கொண்டாலும் அரச வணிக மற்றும் சேவைத் துறையின் வினைத் திறன் என்ன என்பது உலகத்திற்கே தெரிந்த உண்மை. இப்போதும் சிறீலங்கன் எயார் லைன்ஸ் உட்பட ஏராளமான அரச நிறுவனங்கள் பெரும் நடத்தத்தில்தான் இயங்குகின்றன. இவற்றைச் சரிசெய்வதற்கும் நட்டம் இன்றி அவற்றை இயங்க வைப்பதற்குமே ஆளும்தரப்பால் துரித நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டியிருக்கின்றன

இப்படி அரச நிறுவனங்கள் வர்த்தகச் சந்தையில் செயற்றிறன் அற்றிருக்கும் நிலையில், சந்தையின் பிரச்சினைகளுக்கான தீர்வாக மேலும் மேலும் அதற்குள் அரசு நுழைவது என்பது வெற்றிகரமான அணுகுமுறையாக இருக்கும் என்று சொல்லிவிட முடியாது. ஏற்கனவே சீர் செய்யப்படவேண்டிய அரச நிறுவனங்கள் ஏராளம் இருக்கும்போது வர்த்தக, வாணிபத் துறைக்குள் புதிதாக அரசு நுழைவது அரசுக்கு மேலும் சுமைகளை அதிகரிப்பதாக அமைவதற்கான சாத்தியங்களையே உருவாக்கும்.

இலங்கையில் மட்டுமல்ல பொதுவாகவே தெற்காசியா முழுவதுமே அரச வர்த்தக வாணிபத் துறைகள் தோல்வியடைந்தவைகளாகவே இருக்கின்றன. ஊழல் மற்றும் மோசடி இதற்கொரு காரணம் என்கிறபோதும் அரச துறையின் வினைத்திறனற்ற செயற்பாடும் மனப்போக்கும் மற்றொரு முக்கிய காரணம் என்பதையும் ஏற்றுக்கொள்ளவேண்டும். இவை சீர் செய்யப்பட்டு ஏற்கனவே பாதிக்கப்பட்ட அரச நிறுவனங்கள் வெற்றிகரமாகச் செயற்படுத்தப்படாத நிலையில் சுமைகளை மீண்டும் மீண்டும் அதிகரிப்பது புத்திசாலித்தனமானது அல்ல.

எனவே சந்தையைக் கட்டுப்படுத்துவதற்கும் அதனைத் தளம்பல் இன்றி வைத்திருப்பதற்கும் வினைத்திறன் மிக்க மாற்றுச் செயற்றிட்டங்களையே ஆளும்தரப்புப் பரிசீலிக்கவேண்டும்.

# சந்தையின் மன்னர்கள் நுகர்வோர்தானா?

**பிரபாகர்**

நுகர்தல் என்றால் உபயோகித்தல் என்று பொருள்படும். பொருள்களை விலை கொடுத்து வாங்கி உபயோகிப்பவர்களும், கட்டணம் செலுத்தி சேவையைப் பெறுபவர்களும் நுகர்வோர் என்ற வரையறைக்குள் வருகின்றனர். அந்த விதத்தில் இவ்வுலகில் பிறந்த அனைவரும் ஏதாவது ஒரு விதத்தில் நுகர்வோராகி விடுகிறோம். நுகர்வோருக்குப் பாதுகாப்பு கட்டாயம் தேவை என்று அனைவராலும் பேசப்படுகிறது. ஒருவருக்கு பாதுகாப்பு தேவைப்படுகிறது என்றால், ஏதேனும் அச்சுறுத்தல் அவருக்கு இருக்கின்றதென்று பொருள் கொள்ளலாம்.

இன்று நுகர்வோரை ஏமாற்றுவதை நோக்கமாகக் கொண்டு பல போலி நிறுவனங்கள் தொழிலில் ஈடுபடுகிறார்கள். இதனை நெறிப்படுத்தவும், சந்தையில் நுகர்வோர் பயமின்றி பொருள்களை வாங்கவும் சட்டப்பாதுகாப்பு அவசியம் என உலகிலேயே முதன்முதலில் அமெரிக்காவில் உணரப்பட்டது.

அமெரிக்காவில் நுகர்வோருக்கென்று நான்கு உரிமைகளை 15.3.1962- இல் அமெரிக்க குடியரசுத் தலைவராக இருந்த ஜான்.எப்.கென்னடி வெளியிட்டார். அதன் பின் ஐக்கிய நாட்டு சபை 16.04.1985- இல் நுகர்வோர்பாதுகாப்புக்கென்று முதன்முதலாக சில வழிகாட்டுதல்களையும் பின்பு 22.12.2015- இல் கூடுதல் வழிகாட்டுதல்களையும் வெளியிட்டது. நம் நாட்டிலும் நுகர்வோர் பாதுகாப்புக்கென்று 1979 இல் தனிச்சட்டம் இயற்றப்பட்டது. அதன் தொடர்ச்சியாக 2003ஆம் நுகர்வோர் அதிகார சபைச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

நுகர்வோர் இல்லாத சந்தையில்லை. ஆனால் இன்று சந்தையின் மன்னர் நுகர்வோரா என்ற கேள்வி எழுகிறது. குண்டூசியாக இருந்தாலும், குளிர்சாதனப் பெட்டியாக இருந்தாலும், ஒரு பொருளை மக்களிடம் கொண்டு சேர்ப்பவை விளம்பரங்களே.

வியாபாரப் போட்டி மலிந்துவிட்ட இன்றைய உலகில் என் பொருள்தான் சிறந்தது என்று சொல்ல எல்லா நிறுவனங்களும் நிறைய முயற்சி செய்கிறார்கள். ஒரு வணிகர் எந்துப் பொருளை விற்றாலும், அதில் லாபம் காணாமல் இருக்கமாட்டார் என்பதை நுகர்வோர் முதலில் புரிந்துகொள்ளவேண்டும். ஊடகங்கள் மூலமாக வீட்டுக்குள் நுழைந்துவிட்ட விளம்பரங்கள், தேவையற்ற பொருள்களையும் வாங்கவைத்துவிடுகின்றன. விற்பனைக்கென்றும் வணிகத்துக்கென்றும் தனியே பாடத்திட்டங்கள் உருவாக்கப்பட்டு தரங்குறைந்த பொருள்களையும் வாடிக்கையாளரின் தலையில் கட்டிவிடும் திறமை வளர்க்கப்பட்டிருக்கிறது.

ஒரு பொருளை ஒருமுறை இணையத்தில் வாங்க ஆர்வம் காட்டினால், பத்துமுறை அதனை மீண்டும் மீண்டும் காட்டி மூளைச்சலவை செய்து அந்தப் பொருளை விற்பனைசெய்யும் வர்த்தக முறையை இன்று அநேகமாக எல்லா வர்த்தக நிறுவனங்களும் கடைப்பிடிக்கின்றன. இந்நிலையில் நாம் செய்ய வேண்டியது என்ன என்பதே இன்றையத் தலையாயக் கேள்வி.

தரத்திற்கு உத்தரவாதம் இல்லாத எந்தப் பொருளையும் நாம் வாங்கக்கூடாது என உறுதி ஏற்க வேண்டும். மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் பல பொருள்கள் தேசிய தர நிர்ணய ஆணையத்தின் முத்திரையுடன்தான் விற்பனை செய்யப்பட வேண்டும் என்று சட்டமாக்கப்பட்டிருக்கிறது. எனினும் விலை குறைவாக உள்ளது என்பதற்காக தரங்குறைந்த இரண்டாம் தர தயாரிப்புகளை நம்மில் பலர் வாங்குகிறோம். அது தவறு. உத்தரவாதம் உள்ள பொருள்களையே வாங்க வேண்டும். உத்தரவாதம் என்பது ஒரு நிறுவனம் அதன் தயாரிப்புக்கு தருகிற உறுதிமொழி.

ஒருமுறை தரமற்ற பொருளை தவறுதலாக வாங்கி அதில் நாம் சிரமம் அனுபவிக்க நேர்ந்தால் அதுகுறித்து நுகர்வோர் ஆணையத்திலோ அல்லது மத்திய அரசின் மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணைக்குழுவிலோ புகார் செய்யலாம். தரமற்ற பொருள்களைப் புறக்கணிக்குமாறு நண்பர்களுக்கும், மற்றவர்களுக்கும் எடுத்துக் கூறலாம். மீண்டும் மீண்டும் பயன்படுத்தும் வகையிலான பொருள்கள் நமக்கு அதிகம் தேவைப்படுபவையாக உள்ளன. அத்தகைய பொருள்கள் தரமானவையா என ஒருமுறைக்குப் பலமுறைகள் பரிசோதனை செய்த பிறகு தைரியமாக வாங்கி உபயோகிக்கலாம். மறுசுழற்சி செய்து சில பொருட்களை பயன்படுத்தலாமென்றால் அதனையும் தாரளமாக வாங்கிப் பயன்படுத்தலாம்.

விளம்பரங்களில் வரும் எல்லாவற்றையும் அப்படியே நம்பவேண்டாம். அதன் நம்பகத்தன்மை குறித்து தெரிந்தவர்களிடத்திலோ அல்லது இணையத்திலோ விசாரிக்கலாம். தற்போதுள்ள சூழ்நிலைகளில் மின்னணு வர்த்தகத்தில் அதிகரித்து வரும் முறைகேடுகள், போலி விளம்பரங்கள் போன்றவற்றைக் கருத்தில்கொண்டு புதிய சட்டங்களும் நெறிமுறைகளும்கூடப் புதிது புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. அண்மையிலும் உணவுப் பொருள்கள் தொடர்பான விளம்பரங்களில் 12 வயதுக்குட்பட்ட சிறுவர்களை நடிக்கவைக்க முடியாது என்கிற வர்த்தமானி அறிவித்தலை ஆளும்தரப்பு வெளியிட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட நுகர்வோருக்கு நிவாரணம் தரும் வகையில் மாவட்ட, தேசிய நுகர்வோர் அதிகார சபை அலுவலகங்கள் செயற்படவேண்டும். எனினும் அது குறித்த விழிப்புணர்வு மக்களிடம் அதிகளவில் இல்லை. அதனை ஏற்படுத்துவதும் நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாப்பதும் ஆளும்தரப்புகளின் தலையாய கடமை.



# பொதுமக்களது காணிகளை துறைமுக அதிகாரசபை கையகப்படுத்தியுள்ளது

## சண்முகம் குகதாசன் எம்.பி. காட்டம்

துறைமுகஅதிகாரசபையின்காணியை மக்கள் பிடிக்கவில்லை, மக்களின் காணிகளையே இலங்கை துறைமுக அதிகாரசபை கையகப்படுத்தியுள்ளது என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

திருகோணமலைபிரதேசசெயலகத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற பிரதேசஒருங்கிணைப்புக்குழுகூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இந்த கருத்தை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

முத்துநகர் பகுதியில் மக்கள் நீண்டகாலமாக வாழ்ந்து வருவதோடு விவசாய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றார்கள்.

கிட்டத்தட்ட 1887 ஏக்கருக்கு மேற்பட்ட குடியிருப்பு காணியில் இவர்கள் வசித்து வருகின்றார்கள்.

இந்நிலையில் இலங்கை துறைமுக அதிகார சபையினர் ஓர் இரவிலேயே கல்லுப் போட்டு 5226 ஏக்கர் நிலங்களை கையகப்படுத்திக் கொண்டுள்ளனர்.

கிட்டத்தட்ட 1971ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே முத்துநகர் பகுதியில் மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். அதற்கான ஆதாரங்கள் உட்பட ஆவணங்களும் மக்களிடம் இருக்கின்றன.

எனவே அவர்களுடைய காணி விடுவிப்பு தொடர்பில் பிரதேச ஒருங்கிணைப்பு குழு தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான றொஷான் அக்மீமன மற்றும் அதிகாரிகள் துரிதமான நடவடிக்கைகளை மேற்கொண்டு ஏழை மக்களின் காணிகளை அவர்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன்யுத்தத்தால்இடம்பெயர்ந்த வெல்வெரிமக்களுடையகாணிகளையும் விடுவித்து தற்போது இடம்பெயர்ந்து வெள;வேறு இடங்களில் வாழ்ந்து வருகின்ற மக்களையும் அங்கே மீளகுடியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வெல்வெரி பகுதியில் மக்கள் வாழ்ந்த வீடுகள், உடைந்த கட்டடங்கள் கிணறுகள், பலன்தரு மரங்கள் இன்னும் அங்கே இருக்கின்றன.

யுத்தத்தால்இடம்பெயர்ந்தமக்களை வரவேண்டாம் என்று கூறிவிட்டு அந்த காணிகளை தனியார் ஒருவருக்கு குத்தகைக்கு வழங்கியுள்ளனர்.

அதுமட்டுமல்லாம்ஏனையகாணிகளை வனவள பாதுகாப்பு திணைக்களம் கையகப்படுத்தியுள்ளது.

எனவே இவற்றையும் விடுவிக்க இந்த அவையினூடாக கோரிக்கை விடுப்பதாகவும் மக்ஹெய்சர் விளையாட்டரங்கு புளரமைப்பு, திருகோணமலை வைத்தியசாலையின் பௌதீகவள பற்றாக்குறை மற்றும் ஏனைய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் உரையாற்றியிருந்தார்.

# கொழும்பு பங்குச் சந்தைக்கு புதிய நிறைவேற்று அதிகாரி

## விந்தியா ஜயசேகரவுக்கு நியமனம்

இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் கொழும்பு பங்குச்சந்தையின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக விந்தியா ஜயசேகர நியமிக்கப்பட்டுள்ளார்.

கொழும்புபங்குச்சந்தையின் பிரதமநிறைவேற்றுஅதிகாரியாக கடந்த 11 வருடங்கள் பதவி வகித்த ரஜீவ பண்டாரநாயக்க ஓய்வுபெறும் நிலையிலேயே அப்பதவிக்குவிந்தியாஜயசேகர நியமிக்கப்பட்டுள்ளார்.

விந்தியா ஜயசேகர கொள்முதல் மற்றும் விற்பனை சந்தை உள்ளிட்ட நிதிச்சந்தையிலும், முதலீட்டு வங்கிச்சேவை மற்றும் சொத்து முகாமைத்துவத்துறையிலும் பலவருடகால அனுபவமுடையவராவார்.

இதற்கு முன்னர் என்.டி.பி சொத்து முகாமைத்துவ லிமிடெட் நிறுவனத்தின் சிரேஷ்ட முதலீட்டு அதிகாரியாகப் பணியாற்றிய விந்தியா ஜயசேகர, அக்காலப்பகுதியில் சுமார் 380 பில்லியன் ரூபாவுக்கும் மேற்பட்ட சொத்துக்களை திறம்பட முகாமை செய்தமை குறிப்பிடத்தக்கது.






# பல பல்கலைக்கழகங்களிலும் விரிவுரையாளர் பற்றாக்குறை

நாட்டில் பல்கலைக்கழக கட்டமைப்பு விரிவுரையாளர்கள் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளது. அத்தோடு, வெற்றிடமாக உள்ள சில பதவிகளுக்கு தகுதியான நபர்களைக் நியமிக்க அதிகாரிகள் கடுமையாகப் போராடி வருவதாகவும் பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த காலங்களில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி மற்றும் ஊதியத்தில் விதிக்கப்பட்ட தனியாள் வரி போன்ற காரணங்களால் 1,000 பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்கள்.

சில பதவிகளுக்கு தகுதியானவர்களை நியமிக்க முடியவில்லை. நாங்கள் நேர்காணலை நடத்தும் போது தகுதியானவர்கள் வருவதில்லை. ஏனெனில் அவர்களுக்கு பல்கலைக்கழக கட்டமைப்புக்கு வெளியே சிறந்த ஊதியம் வழங்கப்படுகிறது. உதாரணமாக, சில மருத்துவ பீடங்களில் பேராசிரியர்கள் பற்றாக்குறை உள்ளது. கடந்த அரசாங்கம் அதிக வரி விதித்ததால் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பாதிக்கப்பட்டனர். இதனால் இளம் விரிவுரையாளர்கள் நாட்டை விட்டு வெளியேறினர்.

எனவே, வரி விதிப்பில் திருத்தம் செய்வது பல்கலைக்கழக கட்டமைப்புக்கு விரிவுரையாளர்களை ஈர்க்கும் ஒரு நடவடிக்கையாகஇருக்கும். நாட்டைவிட்டுவெளியேறியவர்களும் அவர்களுக்குச் சாதகமான சூழலை உருவாக்கியவுடன் திரும்பி வருவார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். அவர்களை ஈர்ப்பதற்கான ஒரே வழி சம்பள உயர்வு அல்ல. வாழ்க்கைச் செலவு அதிகமாக இருக்கும் பட்சத்தில் ஊதிய அதிகரிப்பு நோக்கத்தை நிறைவேற்றாது. அதிக வரி விதிப்பு தகுதியுள்ளவர்கள் பல்கலைக்கழகங்களில் சேருவதையும் தடுக்கிறது. தற்போதைய நெருக்கடிக்கு பதிலளிப்பதில் நாம் ஒட்டுமொத்த அணுகுமுறையை உருவாக்க வேண்டும். - என அவர் தெரிவித்துள்ளார்.

திறந்த பல்கலைக்கழகம் உட்பட 18 பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களைக் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நிர்வகிக்கிறது.

உயர்கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளதாவது

மொத்த தேவையில் 50 சதவீத அளவுக்கு பற்றாக்குறை நிலவுகிறது. அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்கள் சுமார் 10,000 பேர் உள்ளனர். இயற்கை அறிவியல் தொடர்பான பாடங்களுக்கு பெரும்பாலும் பற்றாக்குறை காணப்படுகிறது.

தற்போது ஊழியர்களை நியமிக்க அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது.

### சர்வமத தலைவர்களின் ஆசியுடன்

# கொழும்பு மாநகர சபையில் புத்தாண்டுக் கொண்டாட்டம்

கொழும்பு மாநகர சபையில் ஆங்கில புத்தாண்டு தினத்தில் சர்வமத தலைவர்களின் ஆசீர்வாத நிகழ்வு கொழும்பு மாநகரசபை ஆணையாளர் பாலிதா நாணயக்கார தலைமையில் இடம்பெற்றதுடன் செயலாளர் ஹசினி லியனகேயும் கலந்துகொண்டார்.

இவ்வாசிர்வாத நிகழ்வில் சிவஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபுசர்மா ஆசீர்வாதம் வழங்குவதையும் உரை நிகழ்த்துவதையும் காணலாம்.





# தேசிய இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வை வழங்காதவரை தமிழர்கள் தேசிய மக்கள் சக்தியை நம்பப்போவதில்லை

## முன்னாள் முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் கூறுகிறார்

தேர்தல் முடிவுகள் எமது மக்கள் தமிழ்த்தேசியத்தை நிராகரித்திருக்கிறார்கள் என்பதைக் காண்பிக்கவில்லை. இம்முறை வடக்கில் தமிழ்தரப்பினருக்கு அளிக்கப்பட்ட வாக்குகளில் வீழ்ச்சி ஏற்படவில்லை. இருப்பினும் அவ்வாக்குகள் தமிழ்க்கட்சிகள் மற்றும் சுயேச்சைக்குழுக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கின்றன.

இந்நிலையில் எதிர்வருங்காலங்களில் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எவ்வாறு கையாளப்போகிறது என்பதிலேயே அதற்கான ஆதரவு தங்கியிருக்கிறது. இனப்பிரச்சினைக்கு ஏற்றுக்கொள்ளத்தக்க நியாயமான தீர்வு வழங்கப்படாதவரை, தமிழர்கள் தேசிய மக்கள் சக்தியை நம்பப்போவதில்லை என தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வாராந்த கேள்வி - பதில் பகுதியில் அண்மையில் நடைபெற்றுமுடிந்த பொதுத்தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தேசிய மக்கள் சக்தியின் வெற்றிக்கு என்ன காரணம் என எழுப்பப்பட்டிருக்கும் கேள்விக்கு மேற்கண்டவாறு பதிலளித்திருக்கும்



விக்னேஸ்வரன், அதுபற்றி மேலும் கூறியிருப்பதாவது -

தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்ட அதிருப்தியே தேசிய மக்கள் சக்தியின் வெற்றிக்குக் காரணமாகும். தமிழ் மக்கள் அவர்களது பிரச்சினைகளுக்கான அரசியல் தீர்வொன்றை எதிர்பார்த்தனர். இருப்பினும் அத்தீர்வு வழங்கப்படவில்லை. மாறாக அவர்கள் தமது பிரதிநிதிகள் நாடாளுமன்ற வரப்பிரசாதங்களை அனுபவிப்பதையும், சுயநல நோக்கங்களுக்காக அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதையும் அவதானித்தனர். எனவே நடைபெற்றுமுடிந்த தேர்தல் முடிவுகளில் ஒருபகுதி தமிழ்பேசும் மக்களின் கோபத்தின் வெளிப்பாடாகும்.

இருப்பினும் அத்தேர்தலில் வட மாகாணத்தில் வாக்குகள் அளிக்கப்பட்டிருக்கும் விதத்தை அவதானிக்கும்போது, தமிழ் மக்கள் தமிழ்த்தேசியத்துக்கு எதிராக வாக்களிக்கவில்லை என்பதைப் புரிந்துகொள்ளமுடியும். ஏனெனில் தெற்குக்கு நேயமான டக்ளஸ் தேவானந்தா மற்றும் அங்கஜன் இராமநாதன் போன்றோர் கடந்த முறை தேர்தலில் பெற்றதை விட மிகக்குறைந்தளவு வாக்குகளையே இம்முறை பெற்றனர்.

அதேபோன்று தேசிய மக்கள் சக்தியினர் அவர்களது தேர்தல் பிரசாரத்தின்போது, மக்களின் தேவைப்பாடுகளை தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் ஊடாக நேரடியாகவே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் கவனத்துக்குக் கொண்டுசெல்லமுடியும் எனவும், ஆகவே டக்ளஸ் தேவானந்தா, அங்கஜன் இராமநாதன் போன்ற இடைத்தரப்பினர்கள் தேவையில்லை எனவும் எடுத்துக்கூறினர். எனவே அவர்களது வாக்குகள் இம்முறை தேசிய மக்கள் சக்திக்கு வழங்கப்பட்டுள்ளன. அத்தோடு அண்மையில் 18 வயதை அடைந்த புதிய வாக்காளர்கள் தொடர்பிலும் தேசிய மக்கள் சக்தி விசேட கவனம் செலுத்தியிருந்தது.

இந்நிலையில் தமிழ்த்தேசிய வாதிகளுக்கான வாக்குகள் இம்முறை தமிழ்த்தேசிய கட்சிகளின் வேட்பாளர்களுக்கும், சுயேச்சை வேட்பாளர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கிறது. எது எவ்வாறிருப்பினும் இம்முறை தமிழ்மக்கள் சுயநல எண்ணமுடைய, நம்புவதற்குத் தகுதியற்ற உறுப்பினர்கள் யார் என்பதை இனங்கண்டிருக்கிறார்கள். ஆகவே எதிர்வரும் தேர்தல்களில் பொதுக்கூட்டணியொன்று உருவாக்கப்பட்டாலும், மக்கள் அந்த உறுப்பினர்களுக்கு வாக்களிக்கமாட்டார்கள்.

தேர்தல் முடிவுகள் எமது மக்கள் தமிழ்த்தேசியத்தை நிராகரித்திருக்கிறார்கள் என்பதைக் காண்பிக்கவில்லை. இம்முறை வடக்கில் தமிழ்தரப்பினருக்கு அளிக்கப்பட்ட வாக்குகளில் வீழ்ச்சி ஏற்படவில்லை. இருப்பினும் அவ்வாக்குகள் தமிழ்க்கட்சிகள் மற்றும் சுயேச்சைக்குழுக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கின்றன.

இந்நிலையில் எதிர்வருங்காலங்களில் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எவ்வாறு கையாளப்போகிறது என்பதிலேயே அதற்கான ஆதரவு தங்கியிருக்கிறது. இனப்பிரச்சினைக்கு ஏற்றுக்கொள்ளத்தக்க நியாயமான தீர்வு வழங்கப்படாதவரை, தமிழர்கள் தேசிய மக்கள் சக்தியை நம்பப்போவதில்லை எனத் தெரிவித்துள்ளார்.

# வன்னி ஆசிரியர் வெற்றிடங்கள் உடனேயே நிரப்பப்படவேண்டும்

## ரவிகரன் எம்.பி. கடும் வாதாட்டம்;

வன்னிப் பாடசாலையில் நிலவும்ஆசிரியர்வெற்றிடங்களை நிரப்புவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப் படவேண்டுமென வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மிகக்கடுமையாக வாதாடியுள்ளார்.

இந் நிலையில் மூன்று மாதகாலத்தில் வடமாகாண பிரதமசெயலாளின்தலைமையில் இப் பிரச்சினைக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்படுமென வடமாகாண பிரதிபிரதமசெயலாளர் எ.அன்ரன் யோகநாயகம்பதிலளித்துள்ளார்.

வவுனியாமாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் வியாழக்கிழமை இடம்பெற்றிருந்தது. குறித்த கூட்டத்திலேயே இவ்வாறு ஆசிரியர்வெற்றிடம்தொடர்பில் பேசப்பட்டது.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் காணப்படுகின்ற ஆசிரியர் வெற்றிடங்கள் மற்றும், மேலதிகமாகஉள்ளஆசிரியர்களின் தரவுகளையும் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் இதன்போது கோரினார்.

சில மாவட்டங்களில் ஆசிரியர்கள், மேலதிகமாகவும், சிலமாவட்டங்களில்ஆசிரியர்கள் வெற்றிடமாகவும்இருப்பதற்கான காரணமென்ன. ஆசிரியர் நியமனங்களை சரியான முறையில் பகிர்ந்து இவற்றை சீர்செய்யவேண்டியவர்கள் இதுதொடர்பில்நடவடிக்கைகள் மேற்கொள்ளாமலிருப்பது ஏன் என இதற்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனால் கேள்வி எழுப்பப்பட்டது.

இந் நிலையில் வடமாகாண கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச்செயலாளர்வே.ஆயகுலன் இதற்குப் பதிலளிக்கையில் -

புதியஆசிரியர்நியமனங்களை வவுனியா,முல்லைத்தீவு,மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கே வழங்கிவருகின்றோம்.

எனினும் முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களில் குறிப்பிட்ட காலத்திற்கு முன்னர் ஆசிரியர் நியமனங்களைப் பெற்ற யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்களின் சேவைக்காலம்எட்டுவருடங்கள் முடிவுற்றவுடன், ஆசிரியர்கள் தமது இடங்களுக்கு இடமாற்றம்கோரியதனாலேயே யாழ்ப்பாண மாவட்டத்தில் மேலதிகமான ஆசிரியர்தொகை அதிகமாகக்காணப்படுகின்றது.

இருப்பினும் அதை நிவர்த்திசெய்வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு மேலதிக ஆசிரியர்களை பெருமளவில் குறைத்து, ஏனைய இடங்களுக்குஆசிரியர்நியமனங்களை பகிர்ந்தளிக்கின்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

முழுமையாகநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவிட்டதென்றில்லை. இன்னும் இந்த ஆசிரியர் நியமனங்களை சீராக பகிரவேண்டிய தேவைப்பாடு இருக்கின்றது.

தற்போது புதிதாக ஆசிரிய இடமாற்றங்கள் கோரப்படுகின்றபோது, இடமாற்றம் கோருகின்ற குறித்த ஆசிரியருக்கான வெற்றிடம் மீள் நிரப்பப்படாமல், இடமாற்றங்களை மேற்கொள்ளக்கூடாதென வடமாகாண கல்விஅமைச்சின் செயலாளர் உத்தரவிட்டிருக்கின்றார்.

இந்த உத்தரவை வலையக்கல்விப் பணிப்பாளர்களுக்குத் தெளிவுபடுத்தியிருக்கின்றோம்.

அந்தவகையில் புதிதாக ஆசிரிய இடமாற்றங்கள் இடம்பெறும்போது, வன்னியில் சேவையாற்றுகின்ற ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுச்செல்வதற்குமுன்னர், அந்த வெற்றிடத்திற்கு ஆசிரியரொருவர் யாழ்ப்பாணத்திலிருந்து நியமனம் பெற்று வருகைதந்தபின்னரே, வன்னியில் சேவையிலிருந்தஆசிரியரைவிடுவிப்பதற்குரிய





நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. இதனால் இந்தப் பிரச்சினைகள் தற்போது குறைவடைந்து செல்கின்றது. இன்னும் சீராக்கவேண்டியுமிருப்பதாகத் தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் நாடாறுமன்ற உறுப்பினர் ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில்-

எமது வன்னிப் பகுதிக்கு குறிப்பாக மிக முக்கியமான பாடங்களான கணிதப்பிரிவு, உயிரியல்பிரிவுகளுக்குக்கூட வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

ஆனால்யாழ்ப்பாணத்தில்63கணிதப்பிரிவு ஆசிரியர்கள் மேலதிகமாக இருப்பதாக விவரங்களில் சுட்டிக்காட்டப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் மேலதிகமாகவுள்ள குறித்த கணிதப்பிரிவைச்சேர்ந்த 63 ஆசிரியர்களையும், ஏனையநான்குமாவட்டங்களிலும் உள்ள ஆசிரியர் வெற்றிடங்களுக்கு நியமிக்காமைக்கான காரணம் என்ன? எனக் கேள்வி எழுப்பினார்.

குறிப்பாக முல்லைத்தீவில் கணிதப்பிரிவில்25ஆசிரியர்வெற்றிடங்கள் காணப்படுகின்றன. அதேபோல் ஏனய மூன்று மாவட்டங்களிலும் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. எனவே யாழ்ப்பாணத்தில் மேலதிகமாக இருக்கின்ற ஆசிரியர்களை, வெற்றிடமாக உள்ள இடங்களுக்கு வழங்கிசீர்செய்கின்றநடவடிக்கைகளை மேற்கௌ;ளுமாறும் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் வலியுறுத்தினார்.

இதன்போது வடமாகாண பிரதிப் பிரதமசெயலாளர் திருமதி எ.அன்ரன் யோகநாயகம் பதிலளிக்கையில் -

நாம் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனுடைய கருத்தை ஏற்றுக்கொள்கின்றோம். மிக விரைவில் ஆசிரியர் சங்கங்களுடனும் கலந்துரையாடி, ஏற்கனவே நிபந்தனை அடிப்படையில்வழங்கப்பட்ட இடமாற்றங்கள் தொடர்பிலும்தீர்மானங்களைமேற்கொண்டு, பொதுவாக அனைத்து மாவட்டங்களும் பயன்பெறக்கூடியவகையில் ஓர் இடமாற்றக்கொள்கையை வகுத்து அதற்கான அனுமதியைப் பெற்று அதை நடைமுறைப்படுத்துவோம் எனத் தெரிவித்தார்.

இதன்போது குறுக்கிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், இந்தப் பிரச்சினைக்கு நடவடிக்கை மேற்கொள்ள இன்னும் எவ்வளவுகாலமெடுக்குமெனக் கேள்வி எழுப்பினார்.

அத்தோடு இதனால் வன்னியைச்சேர்ந்த அதிகளவான மாணவர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றமையையும், இது தொடர்பில் கூடுதலாக கோரிக்கைகள் முன்வைக்கப்படுவதையும் சுட்டிக்காட்டி மிகவிரைவில் இதற்குரிய நடவடிக்கை எடுக்குமாறு மீண்டும் வலியுறுத்தினார்.

இதன்போது இன்னும் மூன்றுமாத அவகாசம் கோரிய வடமாகாண பிரதி பாரதமசெயலாளர் திருமதி.எ.அன்ரன் யோகநாயகம், பிரதமசெயலாளரின்





தலைமயில் இதற்குரிய தீர்வு வழங்கப்படுமெனத் தெரிவித்தார்.

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.ஆர்.பி.சூரியப்பெரும காலமானார்

மூத்த அரசியல்வாதியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜே.ஆர்.பி.சூரியப்பெரும 96 ஆவது வயதில் வியாழக்கிழமை காலமானார்.

ஜே.ஆர்.பி.சூரியப்பெரும 2010 - 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்தார்.

அத்தோடு அக்கட்சியின் கேகாலை மாவட்ட டெடிகம தேர்தல் தொகுதியின் சிரேஷ்ட அமைப்பாளராகவும் அவர் பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர் Kalaikkathir

## தேசிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்து காட்டுவதாகக் கூறிய விடயங்களில் ஒன்றையேனும் 100 நாட்கள் கடந்தும் இந்த ஆளும்தரப்பு நிறைவேற்றவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அலவத்துவல தெரிவித்தார்.

அவர் கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

76ஆண்டுகளின்பின்னர்இம்முறைஅதிக விலையில்பாற்சோற்றைஉண்ணவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். இந்த ஆளும்தரப்பு பதவியேற்கும்போது 170 ரூபாவாகக் காணப்பட்ட சிவப்பரிசியின் விலை தற்போது 280 ரூபாய் வரை உயர்வடைந்துள்ளது.

100 நாட்களில் அரிசியின் விலை 100 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்காக இந்த ஆளும்தரப்பு வெட்கப்படவேண்டும்.

இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கு அறவிடப்படும் 65 ரூபாய் வரியைக் குறைத்து, உள்நாட்டுச் சந்தையில் போட்டித் தன்மையை ஏற்படுத்தி குறைந்த விலையில் மக்களுக்கு அரிசியை வழங்க ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆளும்தரப்பு மக்களைப் பாதுகாப்பதற்குப் பதிலாக அரிசி ஆலை உரிமையாளர்களைப் பாதுகாத்துக்கொண்டிருக்கிறது.

விலைச்சூத்திரம் இருந்தால் ஆளும்தரப்பு என்ற ஒன்று எதற்கு என கேள்வியெழுப்பிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, இவ்வாண்டிலிருந்து எரிபொருளுக்கான வரியைக் குறைத்து மக்களுக்கு நிவாரண விலையில் அதனை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்டும் என்று எதிர்பார்த்த மக்கள் இன்று அமைச்சர்களின் பிரச்சினைகளைக் கேட்டுக்கொண்டிருக்கின்றனர். மக்கள் இதற்காக மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்கவில்லை. விரைவில் ஐக்கிய மக்கள் சக்தியை மறுசீரமைத்து நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் மக்களுக்கான சேவையை ஆற்றுவோம் என்றார்.

## அனுபவமில்லாத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தியோகபூர்வ காரியாலயத்தில் நேற்று சிறப்புச்செய்தியாளர்கள் சந்திப்பு இடம்பெற்றது. அங்கு வஜிர அபேவர்த்தன தெரிவித்ததாவது:

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வங்குரோத்து அடைந்த இந்த நாட்டைப் பொறுப்பேற்று, குறுகிய காலத்துக்குள் உறுதியான நிலைக்குக் கொண்டுவந்தார். நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப அவர் சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடுவதற்கு முன்னர் அதற்குத் தேவையான சட்ட திட்டங்களை நாடாளுமன்றத்தில் அனுமதித்துக்கொண்டார். அதன் பின்னரே நாணய நிதியத்துடன் கலந்துரையாடி அதன் உதவியை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தற்போதைய ஆளும்தரப்பு நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் நடவடிக்கையை அவ்வாறே மேற்கொள்வதாக இருந்தால் ரணில் விக்ரமசிங்கவின் புதிய சட்டங்களை அவ்வாறே முன்னெடுக்க வேண்டும். குறிப்பாக நாடாளுமன்ற வரவு செலவு திட்ட காரியாலயத்தை உயிர்ப்பிக்கும் பொறுப்பு ஆளும் தரப்பிடமே இருக்கிறது. அதேபோன்று ஊழல் மோசடி எதிர்ப்புச் சட்டம் போன்றவற்றை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்தச் சட்டங்களில் ஒன்றையேனும் ஆளும்தரப்பு மீறினால் நாடு வீழ்ச்சியடைய ஆரம்பிக்கும்.

ஆளும்தரப்பு அதிகாரத்திற்கு வந்து மூன்று மாத காலத்தில் அதன் நடவடிக்கைகளை பார்க்கும்போது புதிய மாற்றம் என எதனையும் காணவில்லை. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்னெடுத்த வேலைத்திட்டத்தையே இதுவரை பின்பற்றிச் செல்கிறது. அது தொடர்பில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பதிவியை விட்டுச் செல்லும்போது, அதிகாரம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நாடு நெருக்கடிக்குள்ளாகும்போது எந்த சந்தர்ப்பத்திலும் சவால்களை ஏற்றுக்கொள்வதற்கு தயாராக இருக்கிறார் என்று தெரிவித்திருந்தார். அரசியல் அனுபவம், ஆட்சி செய்த அனுபவம் என்பன நாட்டை நிர்வகிக்க மிகவும் முக்கியமாகும் என்பதை மனதில் வைத்துக்கொண்டு ஆளும்தரப்பு 2025ஆம் ஆண்டை ஆரம்பிக்கவேண்டும் என நாங்கள் பிராத்திக்கிறோம். நாட்டை நிர்வகிப்பதற்கு மாத்திரமல்ல, அனைத்து துறைகளுக்கும் அனுபவம் முக்கியமாகும்.

2025ஆம் ஆண்டு எந்தவிதமான அனுபவமும் இல்லாத அணியொன்றிடம் பொறுப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதன் பெறுபேறு மிகவும் மோசமானதாகும். அது தொடர்பில் எனக்கு எந்தச் சந்தேகமும் இல்லை. அந்தப் பெறுபேறு மிகவும் மோசமான நிலைக்கு வரும்போது ஐக்கிய தேசிய கட்சி மற்றும் எம்முடன் ஒன்றிணையும் அணிகளுடன் சவால்களைப் பொறுப்பேற்றுக்கொண்டு நாட்டையும் மக்களையும் பாதுகாக்க நடவடிக்கை எடுப்போம் என்றார்.

## வீதியோரக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் சமூக, பொருளாதார, கலாசாரம் என்ற அனைத்து அலகுகளையும் மீளக் கட்டியெழுப்புவதற்கு ஓர் உணர்வுபூர்வமான தேசிய திட்டத்துக்கமைய எமது கடமைகளை முன்னெடுத்துள்ளோம்.

தேர்தலின் பின்னர், வங்குரோத்தான நாட்டை மாத்திரம் நாம் பொறுப்பேற்கவில்லை. அப்போது சர்வதேச நாடுகளிடையே இலங்கை மீதான நற்பெயர் தலைகீழாக இருந்தது, இராஜதந்திர ரீதியில் தாழ்த்தப்பட்டிருந்தோம், வெளிநாடுகளுக்கு செல்ல விசாக்களை பெற முடியாமலிருந்தது. சமூகம் என்ற ரீதியில் பல நெருக்கடிகள் உருவாகியிருந்த நாட்டையே நாம் பொறுப்பேற்றோம். இந்த நாட்டை புதிய பாதைக்கு அழைத்துச் செல்வதற்கான பிரதான மூன்று வேலைத்திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

'தூய ஸ்ரீ லங்கா' தேசிய வேலைத்திட்டம், நாட்டை டிஜிட்டல்மயமாக்கும் வேலைத்திட்டம் மற்றும் கிராமப்புற வறுமையை ஒழிக்கும் வேலைத்திட்டம் ஆகியனவே அவையாகும். நாட்டை சூழலியல், சமூகவியலுடன் இணைந்த நெறிமுறையில் உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்ல விஞ்ஞான முறையில் ஒழுங்கமைக்கப்பட்ட 'தூய ஸ்ரீலங்கா' தேசிய வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. பொதுமக்களும் எம்முடன் இணைந்து இத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்ற முனைப்புடன் செயற்படுவதைக் காணக் கூடியதாக உள்ளது.

'தூய ஸ்ரீ லங்கா' தேசிய வேலைத் திட்டத்துக்கமைய வீதியோர சிறு வியாபாரங்கள் அகற்றப்படுவதாகவும், அவ்வாறு வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் வெளியாகியுள்ள செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை. தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ள தேசிய வேலைத்திட்டம் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்வதற்கான வேலைத்திட்டமல்ல. அதற்குரிய சட்டமூலமும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படவில்லை - என்றார்.

## வியாழேந்திரனின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரின் மெய்பாதுகாவலர் நடத்திய துப்பாக்கி சூட்டுச் சம்பவத்தில் 28 வயதுடைய பாலேந்திரன் என்ற இளைஞர் உயிரிழந்தார். பொலிஸார் மெய்பாதுகாவலரைக் கைது செய்தனர்.

இந்த வழக்கு விசாரணையில் பாதிக்கப்பட்டவர் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணிகளான கமலதாஸ், சுதர்ஷன் ஆகியோர் இந்தக் கொலை தொடர்பாக பொலிஸார் உரிய விசாரணை நடத்தவில்லை என தொடர்ந்து ஆட்சபித்து வந்தனர். உயிரிழந்தவரின் பெற்றோரும் விசாரணைகளைக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு மாற்றுமாறு சட்டத்தரணிகள் ஊடாகக் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இதனால் விசாரணை கொழும்பு குற்றப் புலனாய்வுத்திணைக்களத்திற்கு மாற்றப்பட்டது. தற்போது வியாழேந்திரனின் வாகனச் சாரதியான தம்பான் என்றழைக்கப்படும் தனுஷன் என்பவரை சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைது செய்துள்ளனர். அவர் வெளிநாடு செல்ல இருந்து நிலையில் வியாழக்கிழமை கொலைக் குற்றச்சாட்டின் கீழ் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவரை மட்டக்களப்பு நீதிவான் மன்றில் நேற்று குற்றப்புலனாய்வுப் பிரிவு முன்நகர்வு பத்திரம் தாக்கல் செய்து முற்படுத்தியது. சந்தேகநபரை ஜனவரி 17 வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இந்தத்துப்பாக்கிச்சூட்டுச்சம்பவத்தில் கைது செய்யப்பட்ட அமைச்சரின் மெய்பாதுகாவலர் ஒரு வருடத்தின் பின்னர் நீதிமன்ற பிணையில் வெளியேறியிருந்தார். இப்போது 3 வருடத்துக்குப் பின்னர் சந்தேகத்தில் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

# அரசியல் நியமனம் பெற்றிருந்த 18 தூதுவர்கள் திருப்பி அழைப்பு

அரசியல் நியமனம் பெற்ற 18 வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் உயர் ஆணையர்கள் மீள அழைக்கப்பட்டுள்ளனர் என்று வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

புதிய ஆளும்தரப்பின் தொலைநோக்குப் பார்வைக்கு அமைய வெளிநாட்டுச் சேவையை வினைத்திறன் மிக்கதாக மாற்றும் நோக்கில் இவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர் என்று பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா தெரிவித்தார். எனினும் அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவரான மகிந்த சமரசிங்க அந்தப் பதவியில் தொடர்ந்து பணியாற்றுவார் எனவும் அவர் கூறினார்.

அரசியல் செல்வாக்கு அல்லாத அரச சேவையை உருவாக்குவதற்கு தற்போதைய ஆளும்தரப்பு அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா மேலும் தெரிவித்தார்

# ஐஸ் போதைப் பொருளுடன் இருவர் அதிரடியாகக் கைது

*(பாறுக் ஷிஹான்)*

*ஐஸ் போதைப்பொருளுடன் கைதான இருவரிடம் மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.*

*அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புறநகர் பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் நடமாடிய இருவரை சம்மாந்துறை பொலிஸார் வியாழக்கிழமை மாலை கைது செய்துள்ளனர்.*

*கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது நீண்ட காலமாக ஐஸ் போதைப் பொருளகளை பொதி செய்து வியாபாரம் செய்து வந்த இரு சந்தேக நபர்களே கைதாகினர்.*

*கைதான 27 மற்றும் 40 வயதுடைய இரு சந்தேக நபர்களும் கருவாட்டுக்கல், உடங்கா பகுதியை சேர்ந்தவர்கள் என பொலிஸாரின் விசாரணையில் வெளியாகியுள்ளதுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் வசமிருந்து 4200 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டிருந்தது.*

*அத்துடன் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலத்தின் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய பெருங்குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி கே.சதீஸ்கர் தலைமையிலான பொலிஸார் சந்தேக நபர்கள் உள்ளிட்ட சான்றுப்பொருள்கள் என்பன சட்ட நடவடிக்கைக்காக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.*

# கிழக்கு வேலையற்ற பட்டதாரிகளை சந்தித்துக் கலந்துரையாடிய ஆளுநர்

*(அபு அலா)*

*கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர மற்றும் கிழக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகளுக்கிடையிலான கலந்துரையாடல் வெள்ளிக்கிழமை திருகோணமலை ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.*

*2024 ஆம் ஆண்டு ஆசிரியர் சேவைக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதில் ஏற்பட்டுள்ள தாமதம், கிழக்கு மாகாணத்தில் உள்ள வேலையற்ற பட்டதாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், 2025 ஆம் ஆண்டு கிழக்கு மாகாண ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்பு உள்ளிட்டவை குறித்து ஆளுநர் கலந்துரையாடினார்.*

*இங்கு உரையாற்றிய ஆளுநர், 2024 ஆம் ஆண்டுக்கான ஆசிரியர் ஆட்சேர்ப்பு இறுதிக்கட்டத்தில் உள்ளதாகவும், இம்மாதத்தின் பிற்பகுதியில் பணிநியமனம் வழங்கப்படும் எனவும், 2025 ஆம் ஆண்டுக்கான ஆசிரியர் நியமனத்திற்கான அடிப்படைப் பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும் ஆளுநர் தெரிவித்தார்.*





*இது ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினைகளை பரிசீலித்து நியாயமான முறையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்த அவர், ஆட்சேர்ப்பு செயல்முறை மிகவும் சிக்கலானது என்றும், ஆட்சேர்ப்புக்குத் தேவையான நடவடிக்கைகள் கூடிய விரைவில் செய்யப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.*

# 5 மாணவர்களின் படுகொலை நினைவேந்தல் திருமலையில்

திருகோணமலையில் 2006 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட 05 மாணவர்களின் 19 ஆவது நினைவு நாள் 02ஆம் திகதி மாலை திருகோணமலை கடற்கரையில் இடம் பெற்றது. குறித்த நினைவேந்தலானது இராவணன் சேனா அமைப்பின் தலைவர் கு. செந்தூரன் தலைமையில் இடம்பெற்றது. இதன் போது மெழுகுவர்த்தி ஏற்றப்பட்டு உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தினர்.

மேற்படி படுகொலை சம்பவமானது திருகோணமலை கடற்கரையில் வைத்து 02.01.2006 அன்று இடம்பெற்றது.

படுகொலை செய்தவர்கள்-இலங்கை இராணுவம் மற்றும் கடற்படை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலை டொக்யார்ட் வீதி, பெரிய கடற்கரைச் சந்தியிலுள்ள காந்தி சிலைக்கு அருகில் மாலைப் பொழுதில் தினமும் இளைஞர்கள் நின்று கதைப்பது வழக்கம். 02.01.2006 அன்றைய மாலைப் பொழுதும் மாணவர்கள் பலர் அவ்விடத்தில் கூடிநின்று கதைத்துக்கொண்டிருந்தனர்.

அப்போது ஓட்டோ ஒன்றில் வந்த இனம் தெரியாத நபர்கள் அந்த இளைஞர்கள் மீது கைக்குண்டை வீசிவிட்டுக் கோட்டைப் பக்கமாகச் சென்றனர். கைக்குண்டு வெடித்ததில் திருமலை புனிதஜோசப் கல்லூரி மாணவரான யோகராஜா பூங்குழலோன் என்பவர் காயமடைந்தார்.

இவரை ஏனைய மாணவர்கள் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்ல முற்பட்டபோது அப்பகுதிக்கு வந்த கடற்படையினர் அங்கு சுமார் 10 நிமிடங்கள் வரை துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதனால் கடற்கரையில் நின்ற மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடத்தொடங்கினர். இதற்கிடையில் காயமடைந்த மாணவர்களுக்கு அருகில் விரைந்த கடற்படையினர் அவர்களை நிலத்தில் விழுத்தி கண்மூடித்தனமாகத் தாக்கினர்.

மாணவர்கள், இச்சம்பவம் பற்றி தமக்கு ஏதும் தெரியாது எனக் கூறியபோதும் மாணவர்களைச் சப்பாத்துக் கால்களால் மிதித்து முழங்காலில் நிக்க வைத்து சுட்டுக் கொன்றதாக அக்காலத்தில் வெளிவந்த பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன.

இத்தகைய காட்டுமிராண்டித்தனமான தாக்குதலில் 05 மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். மேலும் 05 மாணவர்கள் படுகாயமடைந்திருந்தனர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் விவரம்:

01. லோகிதராசா ரொகான்
02. சண்முகராஜா சஜீந்திரன்
03. மனோகரன் வசீகர்,
04. தங்கத்துரை சிவானந்தன்
05. யோகராஜா கேமச்சந்திரன்

ஆகியோர்கள் ஆவர்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த குறித்த அமைப்பின் தலைவர் கு. செந்தூரன் அப்பாவி மாணவர்களின் படுகொலை கண்டிக்கத்தக்கது இதனை சந்ததிகளுக்கு எடுத்து செல்லவே நினைவேந்தல் இடம் பெறுகிறது. இதனால் துயருற்றிருக்கும் படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் உறவுகளுடன் இணைந்து நாங்களும் பங்கெடுக்கிறோம். - என்றார்.





வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



# தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கக்கோரிய கையெழுத்து போராட்டத்திற்கு பொலிஸார் தடை

நீண்டகாலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கிளிநொச்சி நகரில் பொதுச் சந்தைக்குஅருகில்கையெழுத்து போராட்டம் வியாழக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

போராளிகள் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி நகரில் பொதுச் சந்தைக்கு அருகில் குறித்த கையெழுத்துப் போராட்டம் மேற்கொள்ள தயாரான போது அங்கு வந்த கிளிநொச்சி பொலிஸார் அனுமதி பெற்று குறித்த கையெழுத்து போராட்டத்தை மேற்கொள்ளுமாறு தெரிவித்து போராட்டத்தை தடுத்து நிறுத்தியுள்ளனர்.

பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளையும் புனர்வாழ்வு அளிக்கப்பட்டுசமூகமயப் படுத்தப்பட்ட பின்னர் நீதி மன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட பின்பும் மீண்டும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள போராளிகளையும் புதிய அரசாங்கம் விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தி குறித்த கையெழுத்துப் போராட்டம் தொடர்ச்சியாக வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் நடைபெற்று வியாழன் கிளிநொச்சியில் நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில், கிளிநொச்சியில் மட்டும் இவ்வாறு பொலிஸார் இடையூறுகளை ஏற்படுத்தி தடுத்து நிறுத்தியமைக்கு ஏற்பாட்டாளர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

நீண்டகாலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி சேகரிக்கப்படும் குறித்த கையெழுத்துக்கள் அடங்கிய மகஜர் ஜனாதிபதி அவர்களிடம் கையளிக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.





# நண்பர்களுடன் விருந்துக்குச் சென்றவர் வாவியிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்

திருகோணமலை, வான் எல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மீகஸ்வெள பிரதேசத்தில் உள்ள வாவி ஒன்றிலிருந்து ஆணொருவரின் சடலம் வியாழக்கிழமை மீட்கப்பட்டுள்ளதாக வான்எல பொலிஸார் தெரிவித்தனர்.

கந்தளாய் , வான்எல பிரதேசத்தை சேர்ந்த 37 வயதுடைய நபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

சடலமாக மீட்கப்பட்டவர் கடந்த மாதம் 31 ஆம் திகதி தனது நண்பர்களுடன் இணைந்து விருந்துக்கு சென்றுள்ள நிலையில் மீண்டும் வீடு திரும்பாமல் இருந்துள்ளார்.

இதனால், அவரது உறவினர்கள் வான்எல பொலிஸ் நிலையத்தில் இது தொடர்பில் முறைப்பாடு அளித்துள்ளனர்.

இதனையடுத்து, விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார், மீகஸ்வெள பிரதேசத்தில் உள்ள வாவி ஒன்றிலிருந்து அந்நபரின் சடலத்தை மீட்டுள்ளனர்.

இதுதொடர்பானமேலதிகவிசாரணைகளை வான்எல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.01.2025இல் வெளியிடப்பெற்றது